**பஸ்ஸற பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்ஸற பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பஸ்ஸற பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாத 03 நிர்மாணங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,177,675 கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2024 சனவரி முதல் வாரத்தில் வேலை பூர்த்தி செய்து கடன் கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 144,694 ஆன நூலகப் புத்தகங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட உறுப்பினர் படிகள் மற்றும் தொலைபேசி படிகள் ரூபா 105,194 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்ட உறுப்பினர் படிகளுக்காக தனியான கணக்கொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட படிகள் அறவிடப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டில் லுணுகல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் மற்றும் வண்டியின் பெறுமதி ரூபா 1,117,500 மற்றும் ஊழியர் கடன் ரூபா 675,426 என்பவற்றுக்கான உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான பட்டோலை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் கையேற்பதற்கும் ஊழியர் கடன் மீதியை தீர்த்து வைக்குமாறும் லுனுகல பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 75,712 மதிப்பிழந்த காசோலை தொடர்பான விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பி ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காசோலை தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,709,927 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,399,602 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

**நிதியத்தை ஆக்கபூர்வமாக முதலீட்டில் ஈடுபடுத்தாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலிருந்து சபையின் பெயரில் 2020 இல் வங்கியில் காணப்பட்ட ரூபா 284,058 மீதி ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதியினை நிலையான வைப்பாக வைப்புச் செய்து நிதி ரீதியான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்படும். | நிதியினை ஆக்கபூர்வமாக முதலீடு செய்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 7,856,159 | 6,738,358 | 4,886,434 | 1,851,924 | 7,181,159 | 6,271,199 | 3,599,138 | 2,672,061 |
| **(ii)** | வாடகை | 20,905,122 | 20,461,415 | 15,949,298 | 4,512,117 | 20,873,872 | 20,481,563 | 15,709,218 | 4,772,345 |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 990,000 | 356,618 | 356,618 | 0 | 826,000 | 743,423 | 743,423 | 0 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 2,733,500 | 2,617,116 | 2,617,116 | 0 | 14,569,500 | 21,629,273 | 12,220,263 | 9,409,010 |
| | மொத்தம் | **32,484,781** | **30,173,507** | **23,809,466** | **6,364,041** | **43,450,531** | **49,125,458** | **32,272,042** | **16,853,416** |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதன வரி மீதியான ரூபா 117,493 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறிவிடுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை நீர்கட்டணம் ரூபா 623,571 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 357,827 ஆன நிலுவை நீர்கட்டணம் அறவிடப்பட்டுள்ளதுடன் துண்டிக்கப்பட்டுள்ள நீர் கட்டணத்தை பதிவளிப்பதாக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவைக் கேள்வி வைப்பு கடை வாடகை ரூபா 6,813,253 அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடை வாடகை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 8,666,459 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,322,955 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,006,313 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 1,409,895 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) காணி மற்றும் கட்டட பதிவேட்டின் பிரகாரம் மற்றும் அரசாங்க நில அளவையாளர் திணைக்களத்தால் 1948 சனவரி 30 ஆம் திகதிய Tenement List வரைபடத்தின் பிரகாரம் 30.54 பேச் அளவான காணி சபைக்கு உரித்தாக இருந்தது. இந்தக் காணி ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தாமை காரணமாக வெளித்தரப்பினரால் உரித்து பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 168,000 செலவினம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | 04 வழக்குத் தடவைகளுக்காக அந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | சபைக்குரிய ஆதனங்களை இனங்கண்டு தீர்த்தல் வேண்டும். |
| (ஆ) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் புவி நில தகுதிச் சான்றிதழ் விசேட நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதாயின் அதற்குரிய திட்டம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (NBRO) சமர்ப்பித்து திட்டங்களுக்குரிய பரிந்துரை பெற வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முகாமைத்துவத்தால் அந்த ஆலோசனை தொடர்பில் கவனம் செலுத்தாமல் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் (LDSP) நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 26,079,033 செலவில் புதிய சந்தைக் கட்டிட தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024 மார்ச் மாதம் வரையில் மண்சரிவின் காரணமாக கட்டடம் அமைந்துள்ள நிலத்தில் கணிசமான பாரியளவான வெடிப்பு, உட்பகுதி சுவர் மற்றும் டைல் என்பன வெடித்தமை மற்றும் அதன் கண்ணாடி கதவுகள் முழுமையாக உடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதிக மழை மற்றும் நிலத்தின் ஆழத்தில் கீழ் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டமையினால் இவ்வாறு நிகழ்ந்தது. | நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன் நிலத்தின் தகுதி தரம் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய நிறுவனங்களின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்மானித்தல் வேண்டும். |
| (இ) நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) இன் பிரகாரம் பணி நிறைவுபெற்றவுடன் செயல்நிமித்த உப கட்டுநிதி உடனடியாக தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 88,496 முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பி உரிய ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணிகள் நிறைவேற்றியவுடன் முற்பணம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 659,087 ஆன மீளளிப்புச் செய்ய வேண்டிய சம்பளம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிதியேற்பாட்டிலும், பஸ்ஸற பிரதேச சபை பொது சந்தை கடை உரிமையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 44,770,559 பணத்தை பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டில் 46 கடைகளையுடைய பொது சந்தை தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது கடைகளை வாடகைக்கு வழங்கும்போது பழைய உரிமையாளர்களுக்கு கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக 30 வருட நீண்ட கால வாடகையின் அடிப்படையில் 20 கடைகளும், கேள்வி முறைமையில் நீண்ட கால அடிப்படையில் 21 கடைகளும் மற்றும் வருடாந்த கேள்வியின் அடிப்படையில் 05 கடைகளும் வாடகைக்கு வழங்குவதற்கு சபை தீர்மானித்திருந்தது. இந்த 42 கடைகளில் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 12,165,159 கடை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட 3.2 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கடைகளை அமைப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த கடன் தொகைக்குரிய மாதாந்த கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி ரூபா 507,445 ஆக இருந்த போதிலும் அந்த தொகையை செலுத்துவதற்கு அல்லது பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியின் கடைகளிலிருந்து போதியளவான வருமானமோ பெறப்பட்டிருக்கவில்லை. | பழைய கடை உரிமையாளர்கள் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். | நீதிமன்ற தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 29 ஊழியர்கள், ஓய்வு பெற்றுச் சென்ற 04 ஊழியர்கள் மற்றும் சேவையை விட்டுச் சென்ற 03 ஊழியர்கள் ஆகியோகளுக்குரிய 2016 ஆம் | 2016 ஆம் ஆண்டிலிருந்து செலுத்துவதற்கு காணப்பட்ட தொகையில் ரூபா | குறித்துரைத்த காலத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் |

| | | |
|---|---|---|
| ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணமாக ரூபா 468,978 செலுத்துதலின் தாமதத்தின் காரணமாக மிகைக் கட்டணமாக ரூபா 374,909 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 300,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி மாதாந்தம் தவணையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமைக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவிடல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போதியளவான வருமான வரிகள் இன்றியும் புதிய வருமான வரிகள் இனங்காணாமலும் மற்றும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை இன்றியும் 2020 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக 29 களத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு உரிய கடமைகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்டெம்பர் வரை சபை நிதியத்திலிருந்து ரூபா 2,003,750 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | - பொது மக்கள் சேவைகளில் பல்வேறு பிரிவுகள் சேர்க்கப்பட்டமையினால் அந்த சேவைகளை நிறைவேற்றுவதற்கு மேலதிக ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கால ரீதியில் பதவி அணியினரை அங்கீகரித்து ஆட்சேர்த்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்ட (LDSP) நிதியத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 113,700 ஆன தொற்றுநீக்கி கரைசல் விசிறும் 06 இயந்திரங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | கொவிட் தொற்று நோய் பரவவல் முறையாக குறைவடைந்ததன் அடிப்படையில் தொற்று நீக்கி கரைசல் விசிறுதல் குறைவடைந்தமை மற்றும் எதிர் காலத்தின் போது இந்த இயந்திரத்திலிருந்து பயன்பாட்டைப் பெறக்கூடியதாக உள்ளது. | இந்த இயந்திரத்தை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |